

திருச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஜமால் முகமது கல்லூரியில் புதிதாக திறந்து வைக்க இருக்கும் கட்டிடத்தை கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு நேரில் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினார். அருகில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், காஜாமலை விஜய், குடமுருட்டி சேகர்மற்றும் கல்லூரி நிர்வாகிகள் உள்ளனர்.



திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர் தொகுதியில் திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் கீழ் திருச்சி மாநகரம் காட்டூர், திருவெறும்பூர், பொன்மலை, பகுதிகள் மற்றும் திருவெறும்பூர் தெற்கு, வடக்கு ஒன்றியங்கள், துவாக்குடி நகரம், கூத்தைப்பார் பேரூர் ஆகிய பகுதிகளில் உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தொகுதி பொறுப்பாளர் மணிராஜ், மாவட்டக் கழக நிர்வாகிகள் சேகரன், செங்குட்டுவன், பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், சிவா ஒன்றிய கழகச் செயலாளர்கள் கருணாநிதி, கங்காதரன், பேரூர் கழகச் செயலாளர் தங்கவேலு, மற்றும் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டு உறுப்பினர் சேர்க்கையில் ஈடுபட்டனர்.

## நாமக்கல் வருகை தரும்

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

### மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!



நாமக்கல், ஜூலை 9 -

வரும் 10 ஆம் தேதி, நாமக்கல்லுக்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, சிறப்பான வரவேற்பு அளிப்பது என்று கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக, அவசர செயற்குழு கூட்டம், மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட அவைத்தலைவர் மணிமாறன் தலைமை தாங்கினார். எம்.எல்.ஏ.க்கள் நாமக்கல் ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னுசாமி, சட்டசபை தேர்தல் தொகுதிப் பார்வையாளர்கள், நன்னியூர் ராஜேந்திரன், ரேகா பிரியதர்ஷினி, முனவர்ஜான் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான ராஜேஸ்குமார், கலந்து கொண்டுகூட்டப்பொருள் கொடுத்து விளக்கம் அளித்து பேசினார்.

வருகிற 10 ஆம் தேதி அரசு நிகழ்ச்சியிலும், கட்சி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதற்காக நாமக்கல் வருகை தரும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, மாவட்ட எல்லையில் சிறப்பான வரவேற்பு அளிப்பது என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்ற ப்பட்டது. ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை பணிகள் மற்றும் கட்சியின் ஆக்கப்பூர்வமான பணிகள் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது.

கூட்டத்தில் நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி, முன்னாள் எம்எல்ஏ ராமசுவாமி, முன்னாள் மாவட்ட செயலாளர் பார். இளங்கோவன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க. செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

### ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட முன்னாள் துணைச் செயலாளர் – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

# மொழிப்போர்த் தியாகி வி.சி.கோவிந்தசாமி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



கிருஷ்ணகிரி, ஜூலை 9 -

ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டத்தின் மூத்த அரசியல்வாதியும், மொழிப்போர் தியாகியும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.சி. கோவிந்தசாமி அவர்கள் இயற்கை எய்தினார். (வயது 84 ) என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

போச்சம்பள்ளி அடுத்த வீரமலையில் உள்ள அவரது இல்லத்தில் நேற்று மறைவெய்தினார்.

1971, 1989 தேர்தல்களில் தி.மு.க. சார்பில் காவேரிப்பட்டிணம் தொகுதியில் வெற்றி பெற்று தமிழ்நாடு சட்டசபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், இனமான பேராசிரியர் கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி அவர்களுடன் இணைந்து இயக்கத்தில் பணியாற்றியவர்.

இந்தி திணிப்பு எதிராக மொழி போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

கிளைக்கழக செயலாளர், ஒன்றிய செயலாளர், மாவட்ட துணை செயலாளர் (ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்டம்) மாநில பொதுக்குழு உறுப்பினர்.

மாநில தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளில் 60 ஆண்டுகள் இயக்கத்தில் சிறப்பாக பணியாற்றியவர். அவரது உடலுக்கு ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்று அவரது இறுதி ஊர்வலம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மறைந்த கோவிந்தசாமி அவர்களுக்கு 6 மகன்கள் உள்ளனர்.

# சைதையில் புதிய உறுப்பினர் சேர்க்கை!

சென்னை, ஜூலை 9 –

சைதை கிழக்குப் பகுதி 169 –வது வட்டத்தில் வட்டச் செயலாளர் எல். ஆரோக்கியராஜ் தலைமையில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை துணை மேயர் மு.மகேஷ்குமார் தொடங்கி வைத்தார்.

மாவட்டச் செயலாளர் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, சைதை கிழக்கு பகுதியில் அடங்கிய 169 வது வட்டம், வெங்கடாபுரம், குடிசை பகுதி மற்றும் தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய பகுதியில் 6.7.2025 ஞாயிறு காலை 10.00 மணிக்கு ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்த்தலை பெருநகர துணை மேயர் மு.மகேஷ்குமார் தொடங்கி வைத்து, வீடு, வீடாகச் சென்று, கழக அரசின் சாதனைகளை விளக்கி வீடுகள் தோறும் ஸ்டிக்கர் ஒட்டினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி துணை செயலாளர் மு.ஆரோக்கியம், மாவட்ட பிரதிநிதி இரா.சுதாபிரியன், மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், BLA2, BDA மற்றும் ஏராள மான கழகத் தோழர்கள் கலந்துக்கொண்டனர். வெங்கடாபுர மக்கள் ஆர்வத்துடன் வந்து கட்சியில் உறுப்பினராக பதிவு செய்தனர்.



தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சேலம் கோட்டம் சார்பில் மகளிர் விடியல் பயணம் திட்டத்தின் கீழ் புதிய வழித்தடம், வழித்தட மாற்றம் மற்றும் வழித்தட நீட்டிப்பு பேருந்து சேவைகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேற்று முன்தினம் (07.07.2025) சேலம், பழைய பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி வைத்து பார்வையிட்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், துணை மேயர் திருமதி மா.சாரதா தேவி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் எஸ்.ஜோசப் டயஸ் ஆகியோர் உள்ளனர்.




நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக, அவசர செயற்குழுக் கூட்டம், மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான ராஜேஸ்குமார், கலந்து கொண்டு கூட்டப்பொருள் குறித்து விளக்கம் அளித்து பேசினார். கூட்டத்தில் மாவட்ட அவைத்தலைவர் மணிமாறன் எம்.எல்.ஏ.க்கள் நாமக்கல் ராமலிங்கம், சேந்தமங்கலம் பொன்னுசாமி, சட்டசபை தேர்தல் தொகுதிப் பார்வையாளர்கள், நன்னியூர் ராஜேந்திரன், ரேகா பிரியதர்ஷினி, முனவர்ஜான் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ஆனந்த் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 09.07.2025 | செஞ்சி கிழக்கு ஒன்றியம் | நரசிங்கராயன்பேட்டை | சேலம் கோவிந்தன்<br>இ.நேரு |
| 2 | 10.07.2025 | வல்லம் வடக்கு ஒன்றியம் | நெகனூர் புதூர் | வளவனூர் அன்பரசு<br>இ.நேரு |
| 3 | 12.07.2025 | ஒலக்கூர் மேற்கு ஒன்றியம் | கீழ்மாவிலங்கை | குடியாத்தம் பாரி<br>மா.குடியரசு |
| 4 | 13.07.2025 | மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் | மேல்செவலாம்பாடி | ஆம்பூர் தர்மன்<br>மா.குடியரசு |
| 5 | 14.07.2025 | வல்லம் மத்திய ஒன்றியம் | வல்லம் | குடியாத்தம் புவியரசி<br>விழுப்புரம் ச.கீர்த்தனா |
| 6 | 15.07.2025 | செஞ்சி மத்திய ஒன்றியம் | மணலப்பாடி | ஒசூர் அப்துல் ரகுமான்<br>விழுப்புரம் ச.கீர்த்தனா |
| 7 | 16.07.2025 | மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம் | பெருவூர் | அதிரடி அல்தாப்<br>ச.ஐஸ்வர்யா |
| 8 | 17.07.2025 | வல்லம் தெற்கு ஒன்றியம் | கம்மந்தூர் | போடி காமராஜ்<br>ச.ஐஸ்வர்யா |
| 9 | 18.07.2025 | மரக்காணம் மத்திய ஒன்றியம் | ஏந்தூர் | விழுப்புரம்<br>ச.கீர்த்தனா |
| 10 | 19.07.2025 | மயிலம் வடக்கு ஒன்றியம் | புலியனூர் | கரூர் முரளி<br>த.இன்பக்குமரன் |
| 11 | 20.07.2025 | செஞ்சி பேரூர் | செஞ்சி | கோட்டை யமுனா |
| 12 | 21.07.2025 | ஒலக்கூர் கிழக்கு ஒன்றியம் | ஒலக்கூர் | சைதை சாதிக்<br>கோட்டை யமுனா |
| 13 | 22.07.2025 | மரக்காணம் மேற்கு ஒன்றியம் | வடஆலப்பாக்கம் | புதுவை இரா.கருணாநிதி<br>ச.ஷாநவாஸ் |
| 14 | 23.07.2025 | மயிலம் தெற்கு ஒன்றியம் | பாதிராப்புலியூர் | தூத்துக்குடி சரத்பாலா<br>ச.ஷாநவாஸ் |
| 15 | 24.07.2025 | மேல்மலையனூர் மத்திய ஒன்றியம் | ஆத்திப்பட்டு | சேலம் சுஜாதா<br>மு.ரோஜா |
| 16 | 25.07.2025 | செஞ்சி மேற்கு ஒன்றியம் | கடலாடிக்குளம் | ஆரணி மாலா<br>மு.ரோஜா |
| 17 | 26.07.2025 | மயிலம் மத்திய ஒன்றியம் | வீடூர் | ராஜேந்திரன் பிரசாத்<br>அப்துல் வஹாப் அதாயி |
| 18 | 27.07.2025 | மரக்காணம் கிழக்கு ஒன்றியம் | அடசல் | எட்டையாபுரம் தமிழ்ப்பிரியன்<br>அப்துல் வஹாப் அதாயி |
| 19 | 28.07.2025 | அனந்தபுரம் பேரூர் | அனந்தபுரம் | வாசு கருணாநிதி<br>த.இன்பக்குமரன் |
| 20 | 29.07.2025 | மரக்காணம் பேரூர் | மரக்காணம் | முல்லைவேந்தன் |
| 21 | 30.07.2025 | திண்டிவனம் நகரம் | திண்டிவனம் | எழும்பூர் கோபி<br>முல்லைவேந்தன் |

விழுப்புரம்

நாள் : 07.07.2025

கலைஞர் 100 1924 - 2023





கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் புதிய நீச்சல் குளம் அமைக்கும் பணியினை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், எம்.எல்.ஏ.க்கள் ஆர் .இளங்கோ, க.சிவகாமசுந்தரி, மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி சரவணன், மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், மாநகராட்சி ஆணையர் சுதா மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அருகில் உள்ளனர்.